முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் – 15/2016

**பிரதிவாதி தரப்பு சாட்சி–2 ராஜமாணிக்கம் –** திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 11.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>

1) நான் இன்று எனது அலுவலக அசல் பதிவேடுகளை கொண்டு வந்துள்ளேன். **அதன் உண்மை நகல்கள் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 05.11.2025 ல் காத்தவராயன் கொடுத்த மனுவில், 2017–2018, 2018–2019 ம் வருடங்களுக்குரிய வரி ரசீதை போட்டு கொடுக்கும்படி கேட்டுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மனுதான் காத்தவராயனால் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். **அந்த மனுவின் உண்மை நகல் சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி மனுவில் கதவு எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண் குறிப்பிட்டுள்ளார். மேற்படி மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால், 2022, 2023 ம் வருடத்திற்கு அவர் பெயரில் வீட்டுவரி ரசீது போடப்பட்டிருந்தது. அதனால் 2025, 2026 க்கு வரி ரசீது போட்டுக் கொடுத்தோம். என்னிடம் கொடுத்த மனு 2017 முதல் 2019 வரை ரசீது கொடுக்க வேண்டும் என சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

2) ஆனால், நான் அந்த காலங்களில் பணியில் இல்லாததால் தற்போது நான் பணியில் இருந்த வருடத்திற்குரிய ரசீது மட்டும் போட்டுக் கொடுத்தேன். நான் இங்கு பணியில் சேர்ந்து ஏழு மாதங்கள் ஆகிறது. 05.11.2025 ல் காத்தவராயன் கொடுத்த மனுவின் பேரில் என்னால் 2017 முதல் 2019 வருடங்களுக்கு ரசீது வழங்க முடியாது என ஏதாவது எழுத்து மூலமாக மறுப்பு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 05.11.2025 மனு தவிர வேறு எந்த மனுவும் காத்தவராயன் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 13.02.2018 தேதியில் காத்தவராயன்

பெயரில் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீதில் கதவு எண் 1/144 என்றும், மற்றொரு ரசீதில் 1/139 என்றும் இருந்தது. அதை பரிசீலனை செய்து தற்போது 2025ம் வருடத்திற்கு கதவு எண் 2/166A விற்கான வீட்டுவரி ரசீதை காத்தவராயன் பெயரில் போட்டுக் கொடுத்தேன். வீட்டு கதவு எண் 5 வருடங்களுக்கு ஒருமுறை மாற்றப்படும்.

3) கதவு எண் 2/166 என்பதும் காத்தவராயனுக்கு பாத்தியப்பட்ட வீடா என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண் தான் 2/166, கதவு எண் 2/166A என நான் இடத்திற்கு சென்று பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. எனது உதவியாளர்கள் பார்த்து வந்தார்கள். கதவு எண் 2/166A என்பதுதான் பழைய கதவு எண் 1/144 என்பதற்கான ஆவணம் என்னிடம் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஒரு வீட்டின் கதவு எண்ணை புதிதாக மாற்ற வேண்டும் என்றால் அரசாணை எண் 238, தேதி.10.11.1999 ஐ பின்பற்ற வேண்டும் என்றால் சரிதான். மேற்படி அரசாணை எண்படி கதவு எண் 2/166A வை மாற்றினேனா என்றால் ஆமாம். மேற்படி அரசாணையில் 5 வருடத்திற்கு ஒருமுறை கதவு எண்ணை மாற்ற வேண்டும் என்ற நிபந்தனை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

4) 05.11.2025ல் காத்தவராயன் கொடுத்ததாக சொல்லப்படும் மனுவானது அந்த தேதியில் அவரால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கதவு எண் 2/166A தாவா சொத்திற்கு சம்பந்தப்படாதது என்றால் சரியல்ல. காத்தவராயனுக்கு தரகம்பட்டி கிராமத்தில் வேறு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்புறத்தில் அந்த வீடுகள் உள்ளது என்றால் சரிதான். கதவு எண் 2/166A தாவா சொத்திற்கு தென்புறத்தில் உள்ள வீட்டிற்கு உரியது என்றால் சரியல்ல. கதவு எண் 2/166A இதற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என நான் ஆவணத்தை பார்த்தேனா என்றால் இல்லை. கதவு எண்ணின் அடிப்படையில்தான் வீட்டு வரி ரசீதில் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்றால் சரிதான். காத்தவராயன் கொடுத்ததாக சொல்லும் மனுவில்

கதவு எண் எதுவும் குறிப்பிடாமல், சர்வே எண் மட்டும் குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

5) அதன் அடிப்படையில் நான் அவர் பெயருக்கு வீட்டு வரி ரசீது போட்டதாக சொல்வது ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எங்களுக்கு மனு கொடுக்க வேண்டும் என்றால் நீதிமன்ற முத்திரை ஒட்டிதான் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால், வீட்டு வரி கேட்டு கொடுக்கப்படும் மனுவிற்கு நீதிமன்ற முத்திரை தேவையில்லை. சாட்சி மீண்டும் தன்னால் உறுதியாக சொல்ல முடியாது என்றும், தனக்கு தெரியவில்லை என்றும் சொல்கிறார். 2013 ல் காத்தவராயன் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில்தான் அவர் பெயரில் 2025 ம் வருடத்திற்குரிய வீட்டு வரி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 2013 ல் காத்வராயனுக்கு கிரையம் ஏற்பட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை காத்தவராயன் கொடுத்து நான் அதனை பரிசீலனை செய்தேனா என்றால் ஆமாம்.

6) 2013 ம் வருட கிரைய ஆவணத்தில் கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் முறையாக ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் காத்தவராயன் பெயரில் ஆவணங்களை தயார் செய்துள்ள நான் உதவி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முறையாக பரிசீலனை செய்திருந்தால் வீட்டு வரி ரசீதே ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. 2021 முதல் 2025 வரை உள்ள கதவு எண், தற்போது 2026 ல் மாற்றப்பட்டுள்ளதா என்றால் ஏப்ரல் மாதத்திற்கு பின்னிட்டுதான் மாற்றுவோம். நான் சொல்வது தவறு என்றும், எங்கள் துறையால் அவ்வாறு எந்த ஒரு முறையும் பின்பற்றப்படுவதில்லை என்றால் சரியல்ல. கதவு எண் மாற்றப்படும் போது அதன் உரிமையாளருக்கு கதவு எண் மாற்றப்பட்டது குறித்து அறிவிப்பு கொடுப்போமா என்றால் இல்லை, ரசீதில் மட்டும் மாற்றிக் கொடுப்போம்.

7) 1999ம் வருட அரசாணையின் படி புதிதாக கதவு எண்ணை மாற்றும் போது வரி ரசீதில் பழைய கதவு எண் மற்றும் புதிய கதவு எண் இரண்டையும் குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு நான் வழங்கிய ரசீதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக வீட்டின் கதவு எண்ணை பெயின்டால் எழுதுவதற்கு உரிமையாளரிடம் தொகை வசூல் செய்வோம் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் தொகை வசூல் செய்வதில்லை என்றும், ஊராட்சிமன்றம் மூலமாக செய்வதாக கூறுகிறார். அவ்வாறு ஊராட்சி மன்றத்தில் தொகை வசூல் செய்வது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கொடுத்துள்ள வரி ரசீது தாவா சொத்திற்கு சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் முறையாக சட்ட விதிகளை பின்பற்றவில்லை என்றும், எனவே எனது சாட்சியம் இவ்வழக்கிற்கு வலு சேர்ப்பதாக இல்லை என்றால் சரியல்ல.

8) சர்வே எண்ணை அடிப்படையாக கொண்டு நான் வீட்டி வரி வழங்க எனக்கு உரிமை இல்லை என்றும், நான் எனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 05.11.2025ம் தேதியிட்ட என்னிடம் காட்டப்படும் மனுவானது 3 வெவ்வெறு கையெழுத்துகளால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மனு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**